# டிசம்பர் – 17 – திருவருகைக்கால 04ம் ஞாயிறு
## “எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள்”(1தெச.5:16)

**முதல் வாசகம் : ஏசாயா 61 : 1 – 2, 10 - 11**

ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உள்ளது ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார் ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலை யைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார். ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழங்கவும், நம் கடவுள் அநீதிக்குப் பழிவாங்கும் நாளை அறிவிக்கவும், துயருற்று அழுவோர்க்கு ஆறுதல் அளிக்கவும், ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன் என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும் மலர்மாலை அணிந்த மணமகன் போலும், நகைகளால் அழகுபடுத்தப்பட்ட மணமகள் போலும், விடுதலை என்னும் உடைகளை அவர் எனக்கு உடுத்தினார் நேர்மை என்னும் ஆடையை எனக்கு அணிவித்தார். நிலம் முளைகளைத் துளிர்க்கச் செய்வது போன்றும், தோட்டம் விதைகளை முளைக்கச் செய்வது போன்றும், ஆண்டவராகிய என் தலைவர் பிற இனத்தார் பார்வையில் நேர்மையும் புகழ்ச்சியும் துளிர்த்தெழச் செய்வார்.

**பதில்பாடல் :** என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும்

**இரண்டாம் வாசகம் : 1 தெசலோனி 5 : 16 - 24**

சகோதர சகோதரிகளே! எப்பொழுதும், மகிழ்ச்சியாக இருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து இயேசு வழியாய்க் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே. தூய ஆவியின் செயல்பாட்டைத் தடுக்க வேண்டாம். இறைவாக்குகளைப் புறக்கணிக்க வேண்டாம். அனைத்தையும் சீர்தூக்கிப்பாருங்கள். நல்லதைப் பற்றிக்கொள்ளுங்கள். எல்லா வகையான தீமைகளையும் விட்டு விலகுங்கள். அமைதி அருளும் கடவுள்தாமே உங்களை முற்றிலும் தூய்மையாக்குவாராக. அவரே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வரும்போது உங்களுடைய உள்ளம், ஆன்மா, உடல் அனைத்தையும் குற்றமின்றி முழுமையாகக் காப்பாராக! உங்களை அழைக்கும் அவர் நம்பிக்கைக்குரியவர். அவர் இதைச் செய்வார்.

**நற்செய்தி : யோவான் 1 : 6 – 8, 19 - 28**

கடவுள் அனுப்பிய ஒருவர் இருந்தார் அவர் பெயர் யோவான். அவர் சான்று பகருமாறு வந்தார். அனைவரும் தம் வழியாக நம்புமாறு அவர் ஒளியைக்குறித்துச் சான்று பகர்ந்தார். அவர் அந்த ஒளி அல்ல மாறாக, ஒளியைக் குறித்துச் சான்று பகர வந்தவர். எருசலேமிலுள்ள யூதர்கள் குருக்களையும் லேவியர் களையும் யோவானிடம் அனுப்பி, "நீர் யார்?" என்று கேட்டபோது அவர், "நான் மெசியா அல்ல" என்று அறிவித்தார். இதை அவர் வெளிப்படையாகக் கூறி, மறுக்காமல் ஒப்புக்கொண்டார். அப்போது, "அப்படியானால் நீர் யார்? நீர் எலியாவா?" என்று அவர்கள் கேட்க, அவர், "நானல்ல" என்றார் "நீர் தாம் வர வேண்டிய இறைவாக்கினரா?" என்று கேட்டபோதும், அவர், "இல்லை" என்று மறுமொழி கூறினார். அவர்கள் அவரிடம், "நீர் யார்? எங்களை அனுப்பியவர்களிடம் நாங்கள் மறுமொழி சொல்லியாக வேண்டும் எனவே உம்மைப்பற்றி என்ன சொல்கிறீர்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், ""ஆண்டவருக்காக வழியைச் செம்மையாக்குங்கள் எனப் பாலைநிலத்தில் குரல் ஒன்று கேட்கிறது"என்று இறை வாக்கினர் எசாயா உரைத்தது என்னைப்பற்றியே" என்றார். பரிசேயரால் அனுப்பப்பட்ட அவர்கள் அவரிடம், "நீர் மெசியாவோ எலியாவோ வர வேண்டிய இறைவாக்கினரே அல்லவென்றால் ஏன் திருமுழுக்குக் கொடுக்கிறீர்?" என்று கேட்டார்கள். யோவான் அவர்களிடம், "நான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் அறியாத ஒருவர் உங்களிடையே நிற்கிறார். அவர் எனக்குப்பின் வருபவர் அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை" என்றார். இவை யாவும் யோர்தான் ஆற்றுக்கு அக்கரையிலுள்ள பெத்தானியாவில் நிகழ்ந்தன. அங்குதான் யோவான் திருமுழுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

**தியானம்:** கிறிஸ்து பிறப்பின் ஆயத்த நாள் மூன்றாம் ஞாயிறுவார இறைவார்த்தைகள் நம்மை நாமாகவே ஏற்று எப்பொழுதும் மகிழ்ச்சியாக வாழ எம்மை அழைக்கின்றது. இறைமகன் இயேசுவின் வருகையை ஆயத்தப்பத்த திருமுழுக்கு யோவான் வந்திருந்தார். மக்கள் எதிர்பார்த்திருந்த மெசியா வரப்போகிறார் என்று அறிவித்தார். “ நீர் யார்? என்று அவரைக் கேட்டபோது அவர் தன்னிலை மறக்காமல் தன்னை தூதுத்துவம் பெற்றவாராக மட்டுமே அடையாளப்படுத்திக் கொள்கின்றார். தனது சீடத்துவ பணியையும், தூதுரைப் பணியையும் உளமார ஏற்று தான் பணியாளன் என்று மட்டுமே என்று ஏற்று மெசியாவின் வருகையை முன்னறிவிக்கின்றார். என்று இன்றைய முதல் வாசகத்தில் நாம் காண்கின்றோம். அங்கே இறைவாக்கினர் எசாயா “ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்க வந்தேன்” என்கின்றார். இறைமகனது வருகையயினால் எமக்கு விடுதலை கிடைக்கும், எமது பாவக்கட்டுக்களிலிருந்தும், தீமைகளிலிருந்தும் விடுதலைபெற நாம் எப்பொழும் மகிழ்ச்சியாய் இருப்பதுடன் இடைவிடாது செபிக்க வெண்டும் என இன்றைய இரண்டாம் வாசகம் அறிவுறுத்துகின்றது. மேலும் தீமையானதை விட்டுவிலகி நன்மையானதை பற்றிப்பிடிக்க வேண்டும். தூய ஆவியானவர் நம்மில் செயல்பட இடம்கொடுக்க வேண்டும், நாம் பரிசுத்த வாழ்வு வாழ வேண்டும். அப்போது பாலகன் இயேசு எமது உள்ளத்தில் வந்து தங்குவதுடன் எமது உடல் ஆன்மா அனைத்தையும் அழிவிலிருந்து காப்பாற்றுவார். ஆகவேதான் நம்மை ஏற்றுக்கொண்டு எப்பொழுது மகிழ்ச்சியாக இருக்க கற்றக்கொள்வோம். இயேசு உன்னத இறைமகன் என்பதை ஏற்றுக்கொள்வோம்.